

ஹாய், நான் சட்டு, இது என் மனைவி - ஹேமா. நாங்கள் எங்கள் நகரத்தின் தனியார் ஒப்பந்தக்காரருடன் கசடு அகற்றுபவராக பணியாற்றுகிறோம். எனக்குத் தெரியும், எங்களைப் போன்ற உங்களில் பலரும் இந்த கொரோனா தொற்றுநோய்களின் போது குடிமக்களுக்கு இந்த சேவையை வழங்குகிறார்கள். அதனால்தான் சில பாதுகாப்பு உதவிக்குறிப்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்

பொறுப்புத்துறப்பு : இந்த அறிவுறுத்தல்கள் வழக்கமான பணிகளுக்கான SOPகள் அல்ல, ஆனால் துப்புரவுத் தொழிலாளர்களால் எடுக்கப்பட வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தும் நோக்கம் கொண்டது

## உங்கள் வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன், நீங்கள் கட்டாயம்



1. முழு கை மற்றும் முழு நீள ஆடைகளை அணியுங்கள்



2. காயங்களை நீர்ப்புகா பிளாஸ்டரி மூலம் மூடுங்கள்



3. ULB வழங்கிய அவசரகால பாஸை எடுத்துச் செல்லுங்கள்



4. கைகளை கழுவ தண்ணீர் மற்றும் சோப்பை எடுத்துச் செல்லுங்கள்



5. கையுறைகள், முகமூடி, கவசம் (முகமூடி கிடைக்கவில்லை என்றால், உங்கள் மூக்கு மற்றும் வாயை மறைக்க 2-3 அடுக்குகளை கொண்ட சுத்தமான துணியைப் பயன்படுத்தவும்)



6. கூடுதல் ஆடைகளை எடுத்துச் செல்லுங்கள்

## நீங்கள் பணியிடத்தை அடையும்போது, நீங்கள் கண்டிப்பாக

1 

குறைந்தது 20 விநாடிகள் சோப்புடன் கைகளை கழுவ வேண்டும்

2 பரிந்துரைகளின்படி PPEக்களை அணியுங்கள் (சேதமடைந்தால் புதிய ஒன்றை அதிகாரியிடம் கேளுங்கள்)



3 

PPE அணிந்த பின்னரே துப்புரவு உபகரணங்கள் மற்றும் வாகனத்தைத் தொடுங்கள்

4 

போதுமான இடைவெளி விட்டு அமருங்கள்

5 

தண்ணீர், சோப் / ஆல்கஹால் கலந்த சானிட்டைசரை வாகனத்தில் எடுத்து செல்லுங்கள்

6 

முகமூடி அணிந்திருக்கும் போது உங்கள் கண்கள், மூக்கு மற்றும் வாய் மற்றும் முகமூடியைத் தொடுவதைத் தவிர்க்கவும்

## உங்கள் வேலையைத் தொடங்கும்போது, பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

1 

மற்றவர்களிடம் இருந்து குறைந்தபட்சம் 4 அடி தூரம் இடைவெளி விட்டு இருங்கள்

2 பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தடுப்புக்களை ஏற்படுத்தவும்



3 

கழிவு நீர் அகற்றும் குழாய்களை கையுறை அணிந்து பிடிக்க வேண்டும்

4 கசடு அகற்றிய பிறகு, குழாய் மற்றும் தடுப்புகளை சுத்தம் செய்யுங்கள்



5 


கழிவுகள் ஏதும் சிந்தி விழுந்திருந்தால் சுண்ணாம்பு பவுடரை தெளிக்கவும்

6 பணியில் ஈடுபடும் போது மலத்தை தொடுவதற்கான சாத்திய கூறுகள் இருப்பின் பணியின் பிறகு கைகளை நன்றாக கழுவவும்



7 

கசடு அகற்றிய பிறகு, கிருமிநாசினியைப் பயன்படுத்தி வாகனம் மற்றும் பிற உபகரணங்களை கழுவ வேண்டும்

## உங்கள் பணி தளத்திற்கு நீங்கள் திரும்பும்போது (பரிமாற்ற நிலையம் / வார்டு அலுவலகம் போன்றவை)



பாதுகாப்பு உபகரணங்களை அகற்றவும்

கைகளையும் முகத்தையும் கழுவ வேண்டும்





உடைகளை மாற்றவும்

உடைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை கிருமி நீக்கம் செய்யவும்





பாதுகாப்பு உபகரணங்களை வெயில்படும் இடத்தில் தொங்கவிட்டு

முகமூடி / துணி அணிந்து வீட்டிற்குத் திரும்புங்கள்



உங்களுக்கு இருமல் / காய்ச்சல் அல்லது மூக்கு ஒழுகல் இருந்தால் உடனடியாக மருத்துவரை தொடர்பு கொள்ளுங்கள்

**நமது பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் வைரஸை வெல்வோம்**

துப்புரவு பணிக்கு பாதுகாப்பு மற்றும் கண்ணியம் | BMGF ஆதரவுடன் நகர்ப்புற மேலாண்மை மையம் | manvita@umcasia.org